# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூன் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகச் சட்டம்**

[2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ. ஓ. 75/2006

**இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகத்தைத் தாபித்தல்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட வொரு குழுவாதல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் அல்லது அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**3.** நிறுவகமானது பொதுவான எக்குறிக்கோள்களுக்காக அமைக்கப்படுகின்றதோ பொதுவான அக்குறிக்கோள்கள் பின்வருவனவென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- நிறுவகத்தின் பொதுவான குறிக்கோள்கள்.

(அ) இலங்கையில் நிலவடிவமைப்புக் கலை என்ற உயர்தொழிலைச் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப் பட்ட நியமங்களுக்கு அபிவிருத்திசெய்தல் ;

(ஆ) உயர்தொழிலுக்குத் தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குதலும், நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்முறையில் உயர்தொழிலின் அதிமுக்கிய பங்கை நிறைவேற்றுவதில் அதற்கு வசதியளித்தலும், சூழலைப் பேணிக்காத்தலும் சீர்படுத்துதலும், இயற்கை முறைமைகளை ஒன்றிணைத்தலும் மற்றும் சமூகத்துக்கான சேவையில் இயைபான கலைகளையும் அறிவியல்களையும் பிரயோகித்தலும்.

நிறுவகத்தின் பணிகள்.

4. நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) நிலவடிவமைப்புக் கலையினதும் அதன் உறவுபட்ட விடயங்களினதும் அவற்றோடு தொடர்புபட்ட கலைகளினதும் அறிவியல்களினதும் கற்கையையும், தொழில்முறையையும், பிரயோகத்தையும் அவற்றிலான ஆராய்ச்சியையும் மேம்படுத்துதலும் முன்னெடுத்துச் செல்லுதலும் ;

(ஆ) கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் துறைகளிலான அறிவையும், நுட்பங்களையும், அனுபவத்தையும் சர்வதேசரீதியில் பரிமாற்றுதலுட்பட, உலகளாவிய உயர்தொழிலை மேம்படுத்துதலும், தாபித்தலும், அதனுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுதலும் ;

(இ) ஏனைய இயைபான உயர்தொழிலர்களுடனும் உயர்தொழில்சார் குழுக்களுடனும் சேர்ந்து நிலவடிவமைப்பைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், அபிவிருத்திசெய்தல், முகாமைசெய்தல், பேணிக் காத்தல் என்பவற்றில் இயன்றளவு அதியுயர்வான உயர்தொழில்சார் தொழில்முறை நியமங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஈ) நிலவடிவமைப்புக் கலைஞர்களாகத் தகைமை பெறுவதற்கு விரும்புகின்ற ஆட்களை அனுமதித்தலையும், அவர்களின் உயர்தொழில்சார் கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துதலும்,

மேற்பார்வை செய்தலும், கட்டுப்படுத்துதலும், நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைபெறும் பரீட்சைகளுக்கான கற்கைநெறிகளை விதித்துரைத்தலும் அல்லது அங்கீகரித்தலும் அத்துடன் அத்தகைய நெறிகளையும் பரீட்சைகளையும் நடாத்துதலும் அல்லது நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்தலும் ;

(உ) இலங்கையில் நிலவடிவமைப்புக் கலைஞர்கள் என்ற உயர்தொழிலின் நலன்களையும் அந்தஸ்தையும், சேமநலத்தையும், உரிமைகளையும் மற்றும் சிறப்புரிமைகளையும் மற்றும் அவ்வுயர்தொழில் தொடர்பாகப் பொதுமக்களினதும், நிலவடிவமைப்புக் கலைஞர்களாகத் தகைமைபெறுவதற்கு விரும்புகின்ற ஆட்களினதும் நலன்களையும் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும் ; அத்துடன்

(ஊ) உறுப்பினர்களினதும், அலுவலர்களினதும், ஊழியர்களினதும், அவர்களின் தங்கிவாழுநர்களினதும் நன்மைக்காக நூலகங்களையும், நன்மைத்திட்டங்களையும் தாபித்தலும், ஒழுங்குபடுத்துதலும், பேணுதலும்.

**5.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :- *நிறுவகத்தின் பொதுவான தத்துவங்கள்.*

(அ) நிறுவகத்தின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனைசெய்தல் மற்றும் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) உறுப்பாண்மை தொடர்பிலான கட்டணங்களையும் ஒப்பப்பணங்களையும், உதவுதொகைகளையும் அறவிடுதலும், உறுப்பாண்மைக்குச் சேர்த்தலும் மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் அனுமதித்தலும் ;

(ஈ) நிறுவகத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் அதன் நிதிகளை முதலீடு செய்தலும், நடப்பு வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) நிறுவகமானது தகுதியானதென எண்ணக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் நிறுவகத்தின் நோக்கங் களுக்காகப் பணத்தை முற்பணமாகக் கொடுத்தல், கடனாகக் கொடுத்தல் மற்றும் கடனாகப் பெறுதல் ;

(ஊ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளை யும் தகைமையீனங்களையும், நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கான உயர்தொழில்சார் நடத்தை நியமங்களை விதித்துரைத்தலும், அவை பேணப்படுவதனை உறுதிப்படுத்துதலும் ;

(எ) அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், இடமாற்றுதலும், பதவிநீக்கு தலும், அவர்களுக்கெதிராக வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தலும், அவர்களின் சேவை நியதிநிபந்தனைகளை விதித்துரைத்தலும் ; அத்துடன்

(ஏ) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறான, அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

6. (1) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வோர் உறுப்பாண்மை வகுப்பிற்குமான தகவுடைமை, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப் படுதல் வேண்டும். நிறுவகத்தின் உறுப்பாண்மை.

(2) பின்வரும் உறுப்பாண்மை வகுப்புகள் நிறுவகத்திலிருத்தல் வேண்டும் :-

(அ) இணையுறுப்பினர் ;

(ஆ) உறுப்பினர் ; அத்துடன்

(இ) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர், இதன் பல்வேறு வகுப்புகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளி னால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்தி களின்கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பாண்மை வகுப்புகள் "கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரும் நிறுவகத்தின் பேரவைக்கு அல்லது ஏதேனும் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டு மென்பதுடன், எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர் ஒவ்வொருவரும் நிறுவகத்தின் கூட்டங்களில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய வராதல் வேண்டும், ஆனால், வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

நிறுவகத்தின் உறுப்பாண்மைக் கான கட்டணம்.

**7.** (1) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகத்தின் உறுப்பாண்மைக்குத் தகவுடையவராக உள்ள ஆளொருவர், இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான கட்டணமொன்றை நிறுவகத்துக்குக் கொடுப்பனவு செய் வதன்மேல் உறுப்பினரொருவராக நிரலிற் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் உறுப்பினரொருவராக ஆளொருவரை நிரலிற் சேர்த்தலானது, நிரலிற் சேர்க்கும் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராவது நாள் வரை பயனுடையதாதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய நிரலிற் சேர்த்தல் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றைக் கொடுப்பனவு செய்வதன்மேல் வருடாந்தம் புதுப்பிக்கவும்படலாம்.

பட்டங்களைப் பயன்படுத்துதல்.

**8.** (1) நிறுவகத்தின் எவரேனும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர், "பட்டயம்பெற்ற நிலவடிவமைப்புக் கலைஞர்" என்ற பட்டத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்கும், தாம் நிறுவகத்தின் இணையுறுப்பினரொருவராக உள்ளாரென்பதைச் சுட்டிக்காட்டு வதற்கு அவரது பெயருக்குப் பின்னர் "நி.க.நி.இ. (இலங்கை)" என்ற சுருக்கக் குறியீட்டைப் பயன்படுத்துவதற்கும், தாம் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக உள்ளாரென்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயருக்குப்பின்னர் "நி.க.நி.இ.உ. (இலங்கை)" என்ற சுருக்கக் குறியீட்டைப் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) எந்த நிலவடிவமைப்புக் கலைஞர்கள் குழுமத்தின் பங்காளிகளுள் ஒவ்வொருவரும் நிறுவகத்தின் கூட்டிணைக்கப் பட்ட உறுப்பினரொருவராக உள்ளாரோ அந்த ஏதேனும் நிலவடிவமைப்புக் கலைஞர்கள் குழுமம், "பட்டயம்பெற்ற நில வடிவமைப்புக் கலைஞர்கள்" என்ற பட்டத்தைப்பெற்றுப் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(3) ஒரு குழுமத்தின் பங்காளிகளுள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் களாக இருக்குமிடத்து, அத்தகைய குழுமத்திற்கான விவரணத்தின் பாகமாக, விடயத்துக்கேற்ப, "பட்டயம்பெற்ற நிலவடிவமைப்புக் கலைஞர்" அல்லது "பட்டயம்பெற்ற நிலவடிவமைப்புக் கலைஞர்கள்" என்ற பட்டத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்குப் பேரவையானது அத்தகைய குழுமத்துக்கு அனுமதியளிக்கலாம் ; ஆயின், எஞ்சியுள்ள பங்காளிகள் ஏனைய உயர்தொழில்களின் உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(4) மேற்கூறப்பட்டவாறு தவிர, ஆளெவரும் அல்லது ஆட்கள் குழுவெதுவும், "பட்டயம் பெற்ற நிலவடிவமைப்புக் கலைஞர்" அல்லது "பட்டயம் பெற்ற நிலவடிவமைப்புக் கலைஞர்கள்" என்ற பட்டத்தை அல்லது "நி.க.நி.இ. (இலங்கை)" அல்லது "நி.க.நி.உ. (இலங்கை)" என்ற முதலெழுத்துக்களைப் பெறுதலோ அல்லது பயன்படுத்துதலோ, அல்லது நில வடிவமைப்புக் கலை அல்லது நில வடிவமைப்புக் கலையின் தொழில்முறை அல்லது நில வடிவமைப்புக் கலை என்ற உயர்தொழில் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தில், சஞ்சிகையில் அல்லது வேறு வெளியீட்டில் பெயராக அல்லது பெயரின் பாகமாக அதனைப் பயன்படுத்துதலோ ஆகாது.

(5) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்டதும், அவ்வுட்பிரிவின்கீழ், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் வகுப்பைச் சேர்ந்த ஏதேனும் தரத்தில் நிரலிற் சேர்க்கப்பட்ட ஓர் உறுப்பினர் மட்டுமே பெறக்கூடியதும் அல்லது பயன்படுத்தக்கூடியதுமான ஏதேனும் பதவிப்பெயரை அல்லது சுருக்கக் குறியீட்டுப் பதவிப்பெயரை, ஆளெவரும், அத்தகைய ஆள் அப்போதைக்கு அத்தரத்தில் உறுப்பினரொருவராக நிரலிற் சேர்க்கப்பட்டாலொழிய, பெறுதலோ அல்லது பயன்படுத்து தலோ ஆகாது.

*பேரவை அமைப்பு.*

**9.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் பேரவையொன்று இருத்தல் வேண்டும் ; நிறுவகத்தின் நிருவாகமும் அலுவல்களின் முகாமையும் அதற்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, நிறுவகத்தின் விதிகளுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தலைவரையும், துணைத்தலைவரையும், அடுத்துறுகின்றவொரு பேரவையின் விடயத்தில் கடைசியான கடந்தகாலத் தலைவரையும், செயலாளரையும், பொருளாளரையும், உதவிச் செயலாளரையும், உதவிப் பொருளாளரையும், இரண்டுக்குக் குறையாதோரும் எட்டுக்கு மேற்படாதோருமான அத்தகைய எண்ணிக்கையினரான வேறு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். பேரவையானது, நிறுவகத்தின் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களிடையேயிருந்து, அத்தகைய கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களை அல்லது அவர்களின் ஏதேனும் வகுப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென, பேரவையின் உறுப்பினர் களாக இரு வேறு ஆட்களுக்கு மேற்படாதோரைத் தேர்ந்தெடுப் பதற்கு அல்லது நியமிப்பதற்கு ஏற்பாடுசெய்யலாம் :

ஆயின், எவ்வாறாயினும், நிறுவகத்தின் விதிகளின்கீழ் பேரவை உறுப்பாண்மைக்கும் கூட்டிணைப்பு உறுப்பாண்மைக்குமான தேவைப்பாடுகளை ஈடுசெய்கின்றவர்களான போதிய எண்ணிக்கையினரான ஆட்கள் இருக்கும்வகையிலான அந்தளவுக்காலத்துக்கு நிறுவகம் உளதாயிருக்கும்வரை, தலைவரும் பேரவையின் ஏனைய உறுப்பினர்களும் பின்வருவனவற்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ள உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் :-

(i) ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது ஒரு நிறுவனத்தில் அல்லது நிலவடிவமைப் புக் கலையில் அல்லது நிலவடிவமைப்பு வடிவமைப் பில் அனைத்தடக்க முழுநேர பட்டப்பின் பட்டநெறி யொன்று ; அத்துடன்

(ii) நிலவடிவமைப்புக் கலையின் தொழில்முறையில் அல்லது போதனையில் ஆகக்குறைந்தது ஆறாண்டு கால அடுத்துப்பின்னரான அனுபவம்.

(3) பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின்மூலம், பதவி விலகுதலின்மூலம் அல்லது அகற்றுகையின்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, நிறுவகத்தின் விதிகளிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான காலப்பகுதி யொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் உறுப்பினரொருவர், அதிலிருந்து பதவிவிலகுவதன்மூலம் அல்லது நிறுவகத்தின் உறுப்பினரொரு வராக அவர் இல்லாதொழிந்தால், பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(5) பேரவையின் உறுப்பினரொருவர் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும்பட்சத்தில், அத்தகைய உறுப்பினரின் இடத்தில் இன்னோராள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின்போது பதவிவகித்தலும் வேண்டும்.

(6) காலங்கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற பேரவையின் எவரேனும் உறுப்பினர், உறுப்பினரொருவராக மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாகச் செயல்கள் செல்லுபடி யற்றனவாக் கப்பட மாட்டாது.

**10**. பேரவையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கைகள் எவையும், பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் அல்லது தேர்தலில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

பேரவையின் கூட்டங்கள்.

**11**. பேரவையின் கூட்டங்கள், நிறுவகத்தின் விதிகளிற் குறித்துரைக்கப்படுகின்றவாறாக அத்தகைய முறையில் நடாத் தப்படுதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்கான தத்துவங்கள்.

**12**. (1) பேரவையானது, ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமளித்து வாக்களிக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குகளைக்கொண்டும், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அது தொடர்பில் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அல்லது தேவைப்படுத் தப்படுகின்றவாறான ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதிகள் ஆக்கப்படும்போது, அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் மாற்றப் படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பேரவையானது, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவை தொடர்பிலும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்கலாம் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தலும், பதிவுசெய்தலும் மற்றும் விலக்குதலும், உறுப்பாண்மைக்கான தகைமை

களும் தகைமையீனங்களும், உறுப்பாண்மைச் சான்றிதழ்களின் படிவமும் வழங்குகையும், உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதலும் ; உறுப்பாண்மைக் கட்டணங்களைத் தள்ளுபடி செய்தலும் அல்லது குறைத்தலும், அவற்றைக் கொடுப்பனவு செய்யாமையின் விளைவும், உறுப்பினர்களின் உரிமைகளும், சிறப்புரிமைகளும், கடமைகளும் ;

(ஆ) பேரவையின் பதவிக்காலங்கள், அதற்குத் தேர்ந் தெடுக்கப்படுவதற்கான அல்லது நியமிக்கப்படு வதற்கான தகவுடைமையும் முறையும், பதவிவிலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் மற்றும் அமய வெற்றிடங்களை நிரப்புதல், பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தலும் குழுக்களை நியமித்தலும், பேரவையின் வருடாந்த அறிக்கையும் பொது இலச்சினையை ஏற்றுக்கொள்ளு தலும் பயன்படுத்துதலும் ;

(இ) பேரவையின் அலுவலர்களினது உரிமைகளும், தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் ;

(ஈ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதல் அல்லது நடைபெறச்செய்தல், நிறுவகத்தின் உறுப்பினர் களினது வருடாந்தப் பொதுக்கூட்டமும் மற்றும் விசேட பொதுக்கூட்டங்களும், அத்தகைய பொதுக் கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்த லும், நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) நிறுவகத்தின் ஆதனத்தினது முகாமையும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் ;

(ஊ) நிலவடிவமைப்புக் கலைஞர்களுக்கான உயர்தொழில் சார் நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தல் ;

(எ) ஒழுக்காற்றுக் குழுக்களை நியமித்தலும் அவற்றுக்கான சட்ட உதவியை வழங்குதலும் உட்பட, ஒழுக்காற்று விசாரணைகளுக்கான நடவடிக்கை முறை, முறைப்பாடுகளின் படிவம், குற்றச் சாட்டுக்களைத் தயாரித்தல், மறுமொழியாக விளக்கங்களைக் கொடுத்துதவுதல், அறிவித்தல்களை வழங்குதல், அவற்றுக்கு ஏற்புடையப்படற்பாலதான சான்றைக் கொடுப்பதற்கு எவரேனுமாளைக் கட்டளைவிட்டழைத்தல், அதிலான வழக்கு நடவடிக்கைகள் பற்றிய பதிவேட்டைப் பேணுதல் மற்றும் ஒழுக்காற்றுக் குழுக்களின் அறிக்கைகளினது படிவமும் உள்ளீடும் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான வேறு அலுவலர்களும் ஊழியர்களும் போன்ற நிறுவகத்தின் பணியாட்டொகுதியை நியமித்தல் ;

(ஐ) அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் பதவிநீக்குதலும், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஒ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயித்தல் ;

(ஓ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(ஔ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நன்மைக்கான திட்டங்களைத் தாபித்தலும் ஒழுங்கு படுத்துதலும், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்து தலும்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் உறுப்பினர்கள், நிறுவகத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவிற்கிணங்க ஆக்கப்பட்ட விதிகளுள் எவற்றையும் அத்துடன் அதன்கண் ஏற்பாடுசெய்யப்படாத ஏதேனும் கருமத்தையும் பொருள்கோடலில், பேரவையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

*பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

**13.** (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏனைய அலுவலர்களை அல்லது ஊழியர்களை நியமித்தல் தொடர்பாகப் பேரவையானது அதன் தத்துவங்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் தலைவருக்குக் கையளிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் தலைவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் அவரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கான அல்லது ஊழியருக்கான ஊதியமுட்பட தொழில் நிபந்தனைகள், தலைவரின் ஒருப்பாட்டுடன் பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் முடிபினால் இன்னலுறுகின்ற எவரேனுமாள், அதற்கெதிராக பேரவைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்மீது பேரவையின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

(4) நிறுவகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் தலைவரினால் பதவி நீக்கப்படுதலானது, அத்தகைய பதவி நீக்கம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய பயனுடையதாதலாகாது.

*பொதுவான தகைமை யீனங்கள்.*

**14.** (1) ஆளெவரும் -

(அ) சித்தசுவாதீனமற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அவர் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் ;

(ஆ) கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் எனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டிருந்து, தவிர்க்கமுடியாத நட்டங்கள் அல்லது துரதிஷ்டம் காரணமாக அவரது கடனிறுக்க வகையறவு அல்லது வங்கி முறிவு முழுமையாக அல்லது பகுதியளவில் எழுந்துள்ளதென்ற பொருள்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நீதிமன்றத்தினால் அவருக்கு அளிக்கப்பட்டிருப்பின் ;

(இ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும், மறியற்றண்டனையினால் அல்லது ஒத்த தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான ஏதேனும் தவறுக்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, நிபந்தனையற்ற மன்னிப்பொன்று அவருக்கு அளிக்கப்படாதிருப்பின்,

நிறுவகத்தின் உறுப்பினரொருவராக நிரலிற் சேர்த்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) எவரேனும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராக வந்தால், பேரவையானது, நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருப்பதிலிருந்து அவரை நிரலிலிருந்து அகற்றிவிடுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், நிரலிலிருந்து அகற்றிவிடுதலானது, அத்தகைய ஆள் நிரலிற் சேர்க்கப்படுவதற்குத் தகுதியுள்ளவரெனப் பேரவை திருப்திப்படின், அவர் அடுத்துப்பின்னராக மீள நிரலிற் சேர்க்கப்படுவதனைத் தடுத்தலாகாது.

நிறுவகத்தின் நிதியம்.

**15.** (1) நிறுவகமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப் படுதல் வேண்டும் :-

(அ) பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகமானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள மூலங்களிலிருந்து கடன்களாக, மானியக் கொடைகளாக மற்றும் நன்கொடைகளாக நிறுவகத்தினாற் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) நிறுவகமானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதியாண்டு.

**16.** நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**17.** நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**18.** நிறுவகத்தின் இலச்சினையானது, பேரவைத் தீர்மானமொன்றினது அதிகாரத்தின்மூலமன்றியும் பேரவையின் இரு உறுப்பினர்களின் அல்லது செயலாளரினதும் அந்நோக்கத்துக்காகப் பேரவை அதிகாரமளிக்கவேண்டிய அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலன்றியும் எத்தகையதுமான ஏதேனும் சாதனத்திற் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத் தாட்சியாக அச்சாதனத்தில் தனது பெயர்களை கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது, சாட்சிக்காரரொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும். *நிறுவகத்தின் இலச்சினை.*

**19.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும், ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும். *நிறுவகத்தின் உறுப்பினர்களும், அலுவலர்களும், ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**20.** (இருபத்தாறாம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். *(26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.*

**21.** பேரவையின் உறுப்பினர் எவரும் அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது ஊழியர் எவரும், இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகவன்றி அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது தவிர, இச் சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரினால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை எவரேனுமாளுக்கு வெளிவிடுதலாகாது. *தகவல் வெளிவிடுதலைத் தடைசெய்தல்.*

**22.** இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது எவரேனுமாளினாற் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொணரப்படும் *எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவு*

*நிறுவகத்தினால் செலுத்தப்படுதல்.*

ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத் துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*எழுத்தாணையொன்றை வழங்குவதற்கான தடை.*

**23**. நிறுவகத்திற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பேரவையின் உறுப்பினரொருவருக்கெதிராக, ஆளுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

*தவறுகளும் தண்டங்களும்.*

**24**. சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**25**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*